**O.S. 125/2017 , 31.03.2022 02.30 pm - 03.00 pm**

**வா.சா.3, குமரேசன், த/பெ.கோவிந்த கவுண்டர், வயது 60**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-

நான் 8ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு நன்றாக எழுத படிக்க தெரியும் என்றால் தெரியும். 1ம் வாதியான மல்லிகா எனக்கு உறவினர் என்று சொன்னால் சரிதான், என்னுடைய மனைவி ஆவார். என்னுடைய மாமனார் பெயர் சின்னதம்பி. சின்னதம்பியின் அப்பா தான் ராமன் என்று சொன்னால் சரிதான். ராமன் என்பவர் சர்வே எண்.485/2பி1-ஐ சுயமாக கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். சர்வே எண்.485/2பி1-ஐ ராமன் என்பவர் சுயமாக கிரையம் பெற்ற சொத்து என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தால் சரியல்ல. சர்வே எண்.485/2பி1 ஆனது கூட்டுகுடும்ப சொத்து என்றால் ஆமாம். ஆதியில் ராமன் ஆண்டு அனுபவித்து வந்தார் என்று கூறியிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கை நான் தான் வாதிகளை வைத்து தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரிதான். வழக்கு பற்றிய விவரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் கூறி வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, வழி கேட்டு தாக்கல் செய்துள்ளேன். பள்ளிகூடத்தான் என்கிற முனியப்பன் என்பவரை தெரியுமா என்றால் என்னுடைய தாத்தா ஆவார். அவருக்கு நான்கு பிள்ளைகள் என்றால் சரிதான். முதல் மகன் பெயர் புல்லோடிகான், இரண்டாவது மகன் பெயர் சின்னகண்ணன், மூன்றாவது டேக்கலான் என்கிற பெருமாள், நான்காவது ராமன் ஆகும். ராமனுக்கு 3 ஆண் பிள்ளைகள், 1 பெண் பிள்ளை என்று சொன்னால் சரிதான். அவர்கள் முறையே மாணிக்கம், சின்னம்பி, சண்முகம், வள்ளியம்மாள் என்று சொன்னால் சரிதான். மாணிக்கம், சின்னதம்பி தற்பொழுது உயிருடன் இல்லை. சின்னதம்பியின் வாரிசுகள் தான் 1 முதல் 3 வாதிகள் மற்றும் லட்சுமி ஆவார். வழக்கு எத்தனை சர்வே எண் குறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சர்வே எண்.485/2பி1 ஆனது வடக்கு தெற்காக செவ்வக வடிவத்தில் நீளமாக உள்ளது என்று சொன்னால் சரிதான். அதற்கு மேற்குபுறம் சர்வே எண்.485/2எ1 என்ற சொத்து உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. சர்வே எண்.485/2பி மேற்குபுறம் சர்வே எண்.485/2எ1 உள்ளது என்று சொன்னால் தெரியாது. சர்வே எண்.485/2எ பள்ளிகூடத்தானுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் தெரியாது. சர்வே எண்.485/2பி தான் ராமன் வாங்கிய சொத்து என்று சொன்னால் சர்வே எண் தெரியாது, பள்ளிகூடத்திற்கு பக்கத்தில் வாங்கியது மட்டும் தெரியும். சர்வே எண்.485/2எ-க்கு தனியாக வழிபாத்தியமும், 485/2பி-க்கு தனியாக வழிபாத்தியமும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, பள்ளிகூடத்திற்கு பக்கத்தில் 16 அடி வழி மட்டும் தான் உள்ளது. பள்ளிகூடத்திற்கு அருகாமையில் உள்ள வழியானது வடக்கு தெற்காக சென்று பள்ளிகூடத்திற்கு பின்பகுதியில் கிழக்கு மேற்காக திரும்பி மீண்டும் வடக்கு தெற்காக செல்கிறது என்று சொன்னால் சரியல்ல, வடக்கு தெற்காக தான் உள்ளது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும்பொழுது நான் உடனிருந்தேன் என்று சொன்னால் சரிதான். அவர் தாக்கல் செய்த அறிக்கையை பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

வழியை குறித்து தெளிவாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்து, அது பற்றி எனக்கு தெரிந்தும் தற்பொழுது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1996ல் பாகம் பிரித்துக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன், அது பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 1996 வருட பாகப்பிரிவினையானது பள்ளிகூடத்தான் வாரசுகளுக்கு இடையே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சின்னதம்பி வாரிசுகளுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் என்று சொன்னால் சரியல்ல. ராமகவுண்டர் வாங்கிய சொத்தை தான் பாகம் பிரித்துகொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். 16 அடி வழி உள்ளதாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன், அது எந்த சொத்தில் என்றால் பள்ளிகூடத்திற்கு அருகாமையில் உள்ள என்னுடைய தாத்தா பள்ளிகூடத்தானுடைய சொத்தில் உள்ளது. பள்ளிகூடத்தான் சொத்தில் வழி உள்ளது என்று சொன்னால் சரிதான். எவ்வளவு நீளத்திற்கு அந்த 16 அடி வழி செல்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, 200 மீட்டர் தூரம் இருக்கும். அவ்வாறு 200 மீட்டர் சம்மந்தமாக என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு நான் குறிப்பிடவில்லை என்றும், தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மழை பெய்து வழியானது அழிந்துவிட்டது என்று குறிப்பிட்டுள்ளேன், அது எந்த வருடம் என்றால் வருடாவருடம் காட்டில் மழை பெய்து அழிந்துகொண்டு தான் இருக்கிறது. அவ்வாறு மழை பெய்தாலும் வழி மற்றும் வரப்பை அடித்து செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பள்ளிகூடத்திற்கு வடக்கு பக்கத்தில் கிழக்கு மேற்காக ஒரு தார்சாலை செல்கிறது என்றால் சரிதான். அந்த தார்சாலை முன்பு ஓனியாக இருந்தது என்று சொன்னால் சரிதான். மழை பெய்தாலும் காட்டு வெள்ளமானது அந்த தார்சாலை வழியாக ஓனி வழியில் தான் செல்லுமே தவிர, வழியை அடித்து செல்லாது என்றும், நான் கூறுவதுபோல் வழி எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் நான் வழியை பற்றி சொத்து விவரத்தில் குறிப்பீட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்த வழக்கில் வழியை பற்றி எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழியை பற்றி வழக்கில் குறிப்பிடாமல் அதை குறித்து பரிகாரம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. எவ்வளவு நீளத்திற்கு வழி உள்ளது என்று பரிகாரம் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல, 200 அடிக்கு கேட்டுள்ளேன். 200 அடியை பற்றி வழக்கின் பரிகாரத்தில் நான் கோரவில்லை என்றும், வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 30.08.2017ல் அறிவிப்பில் என்ன விவரம் குறிப்பிட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் ரொம்ப நாள் ஆனதால் ஞாபகமில்லை. நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் அதிக நாட்கள் ஆனதால் ஞாபகமில்லை. எனக்கு வழக்கு பற்றிய எந்த விவரமும் தெரியாததால் பிரமாண வாக்குமூலத்தில் மற்ற சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மறுபடியும் நாங்கள் மறு அறிவிப்பு அனுப்பிய சங்கதிகள் எனக்கு தெரியாது என்று சொன்னால் நிலத்தை பற்றி அனுப்பினோம் மற்றவை தெரியாது. காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன், எப்பொழுது என்றால் தெரியாது. ராமகவுண்டர் சுயமாக வாங்கிய சொத்து என்றும், அந்த சொத்திற்கு தான் வழிபாத்தியம் உள்ளத என்றும், எதிர்வாதியின் வழிபாத்தியம் எதுவும் இல்லை என்றும், எதிர்வாதிகள்ெ காடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிர்வாதிகள் வழியை அழிக்கவில்லை என்றும், வரப்புவழி தான் இருந்தது என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதிகளுக்கு கிழக்குபுறத்தில் சொத்து இருப்பதால் ஏமாற்றி வழியை ஏற்படுத்திகொள்ள இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>** இல்லை.